**பயிற்சி வினாக்கள்:**

1. மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் மற்றும் பள்ளத்தாக்குகள் போன்ற எண்ணற்ற வகையான நிலத்தோற்றங்களுடன் காணப்படுவது ______.

   1. புவி
   2. புவியின் மேற்பரப்பு
   3. புவியின் உட்பரப்பு
   4. பாலைவனம்

2. புவியின் மேற்பரப்பில் பல இடங்களில் அகச் செயல்முறைகளால் ஏற்படுபவை

   1. உயர் நிலப்பகுதிகள்
   2. தாழ்வு நிலப்பகுதிகள்
   3. உயர் நிலப்பகுதிகள் மற்றும் தாழ்வு நிலப்பகுதிகள்
   4. வானிலைச் சிதைவு

3. புவிப்பரப்பில் தொடர்ந்து ஏற்படும் அரித்தல் மற்றும் மறுக்கட்டமைத்தல் ஆகியன ஏற்படுவதற்கான காரணம் ______.

   1. அகச் செயல்முறைகள்
   2. புறச் செயல்முறைகள்
   3. படிய வைத்தல்
   4. கடல் அலைகள்

4. உயர்நிலங்களை அரித்தல் மூலம் தாழ்நிலங்களாகவும், தாழ்நிலங்களை படியவைத்தல் மூலம் உயர்நிலங்களாகவும் மாற்றுவதற்கு ______ எனப் பெயர்.

   1. வானிலைச் சிதைவு 2. சமவெளி 3. சமப்படுத்துதல் 4. நிலத்தோற்றங்கள்

5. நிலப்பரப்பானது இதன் மூலம் தொடர்ந்து தேய்மானத்திற்கு உட்படுத்தப்படுகின்றன.

   1. வானிலைச் சிதைவு மற்றும் அரித்தல்
   2. படிய வைத்தல்
   3. மறுகட்டமைத்தல்
   4. அகவிசை, புறவிசை

LIVEWORKSHEETS

6. புவிமேற்பரப்பில் பாறைகள் உடைந்து மற்றும் சிறுசிறு கற்களாகவும், துகள்களாகவும் சிதறுவது ______.

1. அரித்தல்
2. வானிலைச் சிதைவு
3. கடத்துதல்
4. படிய வைத்தல்

7. நீர், காற்று, பனி மற்றும் கடல் அலைகள் எனப் பலவகைப்பட்ட காரணிகளால் புவியின் நிலத்தோற்றங்கள் அடித்துச் செல்லப்படுவது ______.

1. மறுகட்டமைத்தல் 2. சமப்படுத்துதல் 3. படிய வைத்தல் 4. அரித்தல்

8. அரித்தல் மற்றும் படிய வைத்தல் முறைகளால் புவியின் மேற்பரப்பில் தோற்றுவிக்கப்படுபவை ______.

1. மலைகள் 2. பீடபூமிகள் 3. நிலத்தோற்றங்கள் 4. படியவைத்தல்

9. ஒரு குறிப்பிட்ட பாதையில் தோன்றுமிடத்திலிருந்து முகத்துவாரம் வரை ஓடுகின்ற நீர் ______ எனப்படுகிறது.

1. ஏரி 2. ஆறு 3. கடல் 4. அருவி

10. ஆறு தோன்றுமிடம் ஆற்றின் ______.

1. பிறப்பிடம் 2. ஊற்று 3. முகத்துவாரம் 4. மலைமுகடு

11. ஆறு ஒரு ஏரியிலோ, கடலிலோ அல்லது ஒரு பேராழியிலோ கலக்கும் இடம் ஆற்று ______.

1. பிறப்பிடம் 2. முகத்துவாரம் 3. பள்ளத்தாக்கு 4. கடற்கரை

12. ஆற்று நீரானது செங்குத்து சரிவைக் கொண்ட மலைப்பிரதேசத்தை அரிப்பதால் அங்கு ஆழமான ______ பள்ளத்தாக்குகளை உருவாக்குகிறது.

1. 'U' வடிவ 2. 'V' வடிவ 3. 'T' வடிவ 4. மேற்கண்ட மூன்றும்

13. ஆற்று நீரானது ஒரு செங்குத்துப் பாறையின் வன்சரிவின் விளிம்பில் கீழ்நோக்கி வீழ்வது ______.

LIVEWORKSHEETS

1. முகத்துவாரம் 2. சிற்றாறு 3. நீர்வீழ்ச்சி 4. பிறப்பிடம்

14. மென்பாறைகள் அரிக்கப்படுவதால் தோன்றுவது _______.

1. நீர்வீழ்ச்சி 2. பள்ளத்தாக்கு 3. டெல்டா 4. துணையாறு

15. நீர்வீழ்ச்சி தோன்றுவதற்கான காரணம் _______.

1. மென்பாறைகள் அரிக்கப்படுதல் 2. கடினமான பாறைகள் அரிக்கப்படுதல்

3. நிலத்தடி நீர்மட்டம் உயர்தல் 4. கீழ்நோக்கி விழ்வது

16. தமிழ்நாட்டில் சிற்றாற்றின் குறுக்கே உள்ளது _______.

1. ஆகாயகங்கை அருவி 2. ஒகேனக்கல் அருவி

3. கும்பக்கரை அருவி 4. குற்றால நீர்வீழ்ச்சி

17. நீர்வீழ்ச்சியின் கீழ்ப்பகுதியில் குழிவுறுதல் காரணமாக ஏற்படும் பெரும்பள்ளம்

1. டெல்டா 2. ஆற்றுவளைவு 3. உட்பாய்வு தேக்கம் 4. படிவுகள்

18. ஆறு ஒரு சமவெளி பகுதியையோ அல்லது மலையடிவாரப் பகுதியையோ அடையும்போது படியும் படிவுகளை _______ என்கிறோம்.

1 உட்பாய்வு தேக்கம் 2. வண்டல் விசிறிகள்

3. குழிவுறுதல் 4. வன்சரிவு

19. ஒரு நீரோடை அல்லது ஆறு தன் போக்கில் ஒரு முதன்மை ஆற்றுடன் இணைவது _______.

1. துணையாறு 2. கிளையாறு 3. சிற்றாறு 4. முதன்மை ஆறு

20. ஆறு உருவாக்கும் நிலத்தோற்றங்களில் ஒன்று _______.

1. ஆற்றுவளைவு 2. சர்க்குகள் 3. டார்ன் ஏரிகள் 4. பேராழி

21. உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி _______.

1. விக்டோரியா நீர்வீழ்ச்சி 2. நயாகரா நீர்வீழ்ச்சி

LIVEWORKSHEETS

3. ஜோக் நீர்வீழ்ச்சி 4. ஏஞ்சல் நீர்வீழ்ச்சி

22. உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி அமைந்துள்ள நாடு ______.

1. வெனிசுலா 2. பிரேசில் 3. கொலம்பியா 4. அர்ஜென்டினா

23. நயாகரா நீர்வீழ்ச்சி அமைந்துள்ள கண்டம் ______.

1. தென்அமெரிக்கா 2. வடஅமெரிக்கா
3. அமெரிக்க ஐக்கியநாடுகள் 4. ஆப்பிரிக்கா

24. கனடா, அமெரிக்க ஐக்கியநாடுகளின் எல்லையில் உள்ள நீர்வீழ்ச்சி ______.

1. கனடா நீர்வீழ்ச்சி 2. நயாகரா நீர்வீழ்ச்சி
3. விக்டோரியா நீர்வீழ்ச்சி 4. ஏஞ்சல் நீர்வீழ்ச்சி

25. ஜாம்பியா மற்றும் ஜிம்பாப்வே நாடுகளின் எல்லையில் உள்ள நீர்வீழ்ச்சி ______

1. விக்டோரியா நீர்வீழ்ச்சி 2. நயாகரா நீர்வீழ்ச்சி
3. ஏஞ்சல் நீர்வீழ்ச்சி 4. ஜோக் நீர்வீழ்ச்சி

26. ஆறானது சமவெளிப்பகுதியை அடையும்போது நீரின் அலைதலால் ஆற்றில் தோன்றுபவை ______.

1. அலைகள் 2. வளைவுகள்
3. வண்டல்கள் 4. படிதல்

27. ஆறு வளைந்து மற்றும் சுழன்று செல்வதால் தோன்றும் பெரிய வளைவுகள்

1. அரித்தல் மற்றும் படிதல் 2. குதிரைக் குளம்பு ஏரி
3. ஆற்று வளைவுகள் 4. ஏரிகள்

28. ஆற்று வளைவுகளின் இருபக்கங்களிலும் தொடர்ந்து அரித்தல் மற்றும் படிதல் ஏற்பட்டு ஆற்று வளைவின் கழுத்துப் பகுதி சுருங்கி, பின்னர் ஆற்றிலிருந்து துண்டிக்கப்பட்டு உருவாவது ______.

1. குதிரைக் குளம்பு ஏரி 2. 'V' வடிவ பள்ளத்தாக்கு

LIVEWORKSHEETS

3. ஆற்று வளைவு 4. வண்டல் படிவுகள்

29. தமிழ்நாட்டில் ஆற்று வளைவுகள் காணப்படும் இடம் ______.

1. காஞ்சிபுரத்தில் உள்ள அடையாறு

2. திருவண்ணாமலையில் உள்ள செய்யாறு

3. கடலூர் மாவட்டத்திலுள்ள சேத்தியாத்தோப்பு வெள்ளாற்றுப் படுகை

4. சிவகங்கை மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு

30. 'ஆற்றுவளைவு' என்ற சொல் உருவானதின் அடிப்படை ______.

1. மியாண்டர் ஆறு 2. வெள்ளாறு 3. செய்யாறு 4. மணிமுத்தாறு

31. 'ஆசியா மைனர்' எனப்படுவது ______.

1. பிரான்ஸ் 2. துருக்கி 3. சீனா 4. ஜப்பான்

32. ஆற்றின் வெள்ளப்பெருக்கு நுண்துகள்கள், மண் மற்றும் இதர பொருட்கள் கரையை ஒட்டிய பகுதிகளில் அடுக்குகளாக படிந்துள்ளவை ______.

1. கடற்கரை 2. குதிரைக்குளம்பு ஏரி

3. ஆற்றுவளைவு 4. வண்டல் படிவுகள்

33. வண்டல் படிவுகளால் உருவாக்கப்படுபவை ______.

1. வெள்ளச் சமவெளி 2. லெவீஸ்

3. உயர் அணை 4. இவை அனைத்தும்

34. லெவீஸ் எனப்படுவது ______.

1. உயர் அணை 2. ஆற்றுச் சமவெளி 3. மியாண்டர் 4. வண்டல் படிவுகள்

35. ஆறு கடலை அடையும் போது, ஆற்று நீரின் வேகம் குறைந்து பல பிரிவுகளாக பிரிந்து செல்வது ______.

1. துணையாறுகள் 2. கிளையாறுகள்

3. ஆற்று வளைவுகள் 4.வெள்ளச் சமவெளி

LIVEWORKSHEETS